சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண். 288/2024

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் PW1/DW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. ஆனந்த் | நாள். 10.04.2026 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணி புரிந்து வருகிறேன். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 29.11.2014 தேதியிட்ட பிரதிவாதி எங்கள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் ஒப்பந்தம் அசல் **வா.த.சா.ஆ. 1.** 28.11.2017, 15.10.2020 மற்றும் 19.09.2023 தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதங்கள் முறையே **வா.த.சா.ஆ. 2 முதல் வா.த.சா.ஆ. 4.** 23.05.2024 தேதியில் எங்கள் வங்கி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ. 5.** பிரதிவாதி அதனை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **வா.த.சா.ஆ. 6.** பிரதிவாதியின் வங்கி கணக்கு பட்டியல் **வா.த.சா.ஆ. 7.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்.